1973 மார்ச் 26]

Trawler Building Project.

*510 Q—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state :—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to set up a Public Limited Company for manufacturing trawlers at Mandapam in this State ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மண்டபத்திலுள்ள, கப்பல் பழுது பார்க்கும் தளம், பணிக்களரி, சரிவுப்பாதை வசதிகளைப் பயன் படுத்திக்கொண்டு பொதுத் துறையின் கீழாயினும், கூட்டுத் துறையின் கீழாயினும் இழுவைப்படகு கட்டும் தளம் ஒன்றை அமைக்கும் செயற் குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, இந்த ஆண்டில் இவ்விதப் படகுகள் எத்தனை தயாரிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படு கிறது ? இதற்காக ஃபாரின் கொலாப்ரேஷன் ஏதாவது உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : வெளிநாட்டிலிருந்து 3 இழுவைப் படகுகள் வாங்குவது, மண்டபத்திலே 3 இழுவைப் படகுகள் கட்டுவது, மீனளத் திட்டம் ஒன்றைச் செயல்படுத்துவது, அதன் மூலமாக கூன் இரால்களைப் பிடித்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது என்று திட்டமிடப்பட்டிருக்கிறது. இதற்கு 2 கோடி ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

கும்முடிப்பூண்டியில் குடும்ப-சிறுர் நலத் திட்டம்.

* 511 வினு.—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா ?

கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியப் பகுதியில் குடும்ப-சிறுர் நலத் திட்டம் ஒன்றைத் தொடங்குவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இல்லை.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, இந்த குடும்ப-சிறுர் நலத் திட்டம் தமிழ் நாட்டிலே வேறு எந்த எந்த ஒன்றியங்களிலே நடை பெற்றுக்கொண்டிருக்கிறது ? இது மத்திய அரசின் திட்டம் என்றுல் பிற்பட்ட பகுதியாகிய கும்முடிப்பூண்டியிலே இதைத் தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?